Registered with the Registrar
of Newspapers for India
under No. M. 8270

Registered No. TN/PMG(CCR)/42/09-11
WPP No. 88(556)
Dated : 7-6-2010
Price : Rs. 8-00

सत्यमेव जयते

# புதுச்சேரி மாநில அரசிதழ்

# La Gazette de L' État de Poudouchéry

# The Gazette of Puducherry

## PART - I

| சிறப்பு வெளியீடு | EXTRAORDINAIRE | EXTRAORDINARY |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற வெளியீடு | Publiée par Autorité | Published by Authority |
| விலை : ரூ. 8-00 | Prix : Rs. 8-00 | Price : Rs. 8-00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எண் | 33 | புதுச்சேரி | திங்கட்கிழமை | 2010 ஆ | ஜூன் மீ | 7 வ | |
| No. | 33 | Poudouchéry | Lundi | 7 | Juin | 2010 | (17 Jyaistha 1932) |
| No. | 33 | Puducherry | Monday | 7th | June | 2010 | |

புதுச்சேரி அரசு

**போக்குவரத்துச் செயலகம்**

*[அரசு ஆணை பலவகை எண் 11/TD/2010, நாள் 2010 ஜூன் மீ 7வ]*

**அறிவிக்கை**

*1988-ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் 88-ஆம் பிரிவு (5) ஆம் உட்பிரிவின் கீழ் கர்நாடகாவிலிருந்து புதுச்சேரி மற்றும் புதுச்சேரியிலிருந்து கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கிடையேயான வழித்தடங்களில் மேற்சொன்ன மாநிலம் மற்றும் ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகளின் மக்கள் சிறந்த, சிக்கனமான ஒருங்கிணைக்கப்பட்ட பயணியர் பேருந்துகள், சரக்கு ஊர்திகள் மற்றும், வாடகைச் சீருந்துகள் (Motor Cabs) சேவைகளைப் பெறச் செய்யும்பொருட்டு மேற்சொன்ன மாநிலம் மற்றும் ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு ஆகிய இரண்டின் போக்குவரத்து இயக்குபவர்களால் மாநிலங்களுக்கிடையேயான வழித்தடங்களில் பயணியர் பேருந்துகள், சரக்கு ஊர்திகள் மற்றும் வாடகைச் சீருந்துகள் இயக்குவதற்காக*

கர்நாடகா மாநிலம் மற்றும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு ஆகியவை பரிமாற்ற உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்வதற்கு உத்தேசித்துள்ளன என்பதால், 1988-ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் (மையச்சட்டம் எண் 59/1988) 88-ஆம் பிரிவு (5)-ஆம் உட்பிரிவின்படி 17-9-2009 தேதியிட்ட புதுச்சேரி அரசின் அதிகாரமுறை சிறப்பு அரசிதழ் எண் 71 இன் பாகம்- 1 இல் 17-9-2009 தேதியிட்ட புதுச்சேரி போக்குவரத்துச் செயலக பலவகை அரசாணை எண் 14/2009/TD என்ற பரிமாற்ற போக்குவரத்து உடன்படிக்கையின் வரைவினை வெளியிட்டு, அதன்மீது பெறப்பட்ட கருத்துரைகள் அரசால் கருதுகை செய்யப்பட்டு, தற்போது 1988-ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் (மையச் சட்டம் எண் 59/1988), 88-ஆம் பிரிவு (6)-ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி, புதுச்சேரி ஆளுநர், புதுச்சேரி அரசு கர்நாடகா அரசுடன் இணைந்து நிறைவேற்றுவதற்கு பின்வரும் பரிமாற்ற போக்குவரத்து இறுதி உடன்படிக்கையினை ஈங்கிதனால் வெளியிடுகிறார்.

## கர்நாடகா மாநிலம் மற்றும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்கிடையில் நிறைவேற்றப்பட்ட மாநிலங்களுக்கிடையேயான பரிமாற்ற போக்குவரத்து உடன்படிக்கை

இந்த உடன்படிக்கையானது இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு, ஜூன் மாதம், 7-ஆம் தேதியன்று கர்நாடகா ஆளுநர் (இதில் இதன்பின்பு "கர்நாடகா அரசு" என அழைக்கப்பெறும் மற்றும் தறுவாய் எங்கெல்லாம் இடமளிக்கிறதோ அங்கெல்லாம் இந்தச் சொற்றொடர் அவருக்குப் பின்பு அவருடைய பதவியை வகிப்பவர்களையும் உள்ளடக்கும்) என்னும் ஒரு தரப்பினருக்கும் இதனடியில் குறிப்பிடப்பட்டவாறான நிபந்தனைகளுக்குட்பட்டு புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு ஆளுநர் (இதில் இதன்பின்பு "புதுச்சேரி அரசு" என அழைக்கப்பெறும் மற்றும் தறுவாய் எங்கெல்லாம் இடமளிக்கிறதோ அங்கெல்லாம் இந்தச் சொற்றொடர் அவருக்குப் பின்பு அவருடைய பதவியை வகிப்பவர்களையும் உள்ளடக்கும்) என்னும் மற்றொரு தரப்பினருக்கும் நிறைவேற்றப்படுகிறது.

I. ***பயணிப் பேருந்துச் சேவைகள்***.— மாநிலம் மற்றும் ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு ஆகிய இரண்டினால் பயணிப்பேருந்துகளை இயக்குவதற்கான மாநிலங்களுக்கிடையேயான வழித்தடம் இதனடியில் காட்டப்பட்டவாறாக இருக்கும் :

(a) கர்நாடகா மாநிலப் போக்குவரத்து ஏற்பு நிறுவனம் பின்னிணைப்பு "A" இல் காட்டப்பட்ட வழித்தடங்களில் சேவைகளை இயக்கும்.

(b) புதுச்சேரி சுற்றுலா மற்றும் போக்குவரத்து வளர்ச்சிக் கழகமானது சுற்றுலாத் துறையிலிருந்து இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதுச்சேரி சாலைப் போக்குவரத்துக் கழகம் என மறுபெயரிடபட்டிருப்பதால் அது பின்னிணைப்பு "B" இல் காட்டப்பட்ட வழித்தடங்களில் சேவைகளை இயக்கும்.

(c) பரிமாற்றம் செய்யும் மாநிலத்தில் ஓர் இயக்குபவரால் வசூலிக்கப்படுகிற பயணக் கட்டணம் மற்றும் சரக்குச் சுமைக் கட்டணங்கள் அதற்கிணையான

சேவைகளுக்காக அந்த மாநிலத்தின் இயக்குபவர்களால் வசூலிக்கப்படுகிற அத்தகைய கட்டணம் அளவிடையதாகவே இருக்கவேண்டும்.

(d) மாநிலப் போக்குவரத்து ஏற்பு நிறுவனத்தில் நிரந்தரமாக அனுமதியளிக்கப்பட்ட பயணிப் பேருந்து பழுதடைகிற அல்லது விபத்து ஏற்படுகிற சமயத்தில் மாநிலம் மற்றும் ஒன்றியத்து ஆட்சிபரப்பு ஆகிய இரண்டின் தகுதிவாய்ந்த அதிகார ஆயம் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒற்றை முனை வரியில் மாற்றீடாக இயக்குவதற்கு உதிரிப் பேருந்து இசைவாணைச் சீட்டு வழங்கும் :

(i) வழித்தடங்கள் எதன் தொடர்பாகவும் பேருந்துகள் எண்ணிக்கை மற்றும் பயணங்களின் எண்ணிக்கையானவை அனுமதியளிக்கப்பட்ட வரம்பைவிட மிகுதல் கூடாது ;

(ii) அவ்வாறு இயக்கப்படும் வாகனங்கள் தொடர்புடைய மாநிலங்கள் அல்லது ஒன்றியத்து ஆட்சிபரப்பின் தொடர்புடைய மாநிலப் போக்குவரத்து ஏற்பு நிறுவனத்தால் மேற்சொன்ன நிபந்தனையின் பேரில் பிறப்பிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றினைக் காட்சிக்கு வைக்க வேண்டும். இது குறித்த தகவல் அத்தகைய இயக்குதலின் தேதியிலிருந்து இருவார காலத்திற்குள் பரிமாற்றம் செய்யும் போக்குவரத்து அதிகார ஆயத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

(e) முதனிலை அதிகார ஆயத்தின் பரப்பில் தனியாக அமைந்துள்ள மாநிலத்திற்கிடையேயான ஒரு வழித்தடத்தின் அந்த மாறுபாடானது, தொடர்புடைய மாநிலப் போக்குவரத்து அதிகார ஆயத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இருக்க வேண்டும். அந்த மாறுபாடு கோருவதானது பரிமாற்றம் செய்யும் மாநிலத்தில் இருக்கும் நேர்வில், அது, மாநிலப் போக்குவரத்து அதிகார ஆயம் ஆகிய இரண்டின் ஒன்றுக்கொன்று ஒத்த இசைவின் பேரில் முடிவு செய்யப்பட வேண்டும்.

(f) ஒரு வாகனம் மற்றொரு வாகனத்தைக் கொண்டு மாற்றமைவு செய்வதானது (Replacement), உள்ளூர் மாநில அதிகார ஆயத்தினால் மேலொப்பமிடும் சீட்டில் குறிப்பிடப்பட வேண்டும் மற்றும் வாகனத்தின் பதிவுக் குறியீடு மற்றும் இருக்கை அளவு ஆகியவற்றைக் குறிப்பிட்டு பரிமாற்றம் செய்யும் மாநிலத்தின் மாநிலப் போக்குவரத்து அதிகார ஆயத்திற்குத் தகவல் அனுப்பப்பட வேண்டும்.

(g) **வரிவிதிப்பு :** பரிமாற்றம் செய்யும் மாநிலத்தில் மேலொப்பத்தினால் உள்ளடக்கப்படும் போக்குவரத்து வாகனங்கள் பரிமாற்றம் செய்யும் மாநிலத்திற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும் என ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்த ஒற்றை முனை வரிப்பயனான மாநிலங்களுக்கிடையே உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட வழித்தடங்களில் நிரந்தர மற்றும் தற்காலிக ஆகிய இரண்டு இசைவாணைச் சீட்டுகளைக் கொண்டுள்ள பயணிப் பேருந்துகளுக்கும் பொருந்தும்.

— 4 —



ஒற்றை முனை வரிப்பயனானது எதிர்காலத்தில் அனுமதிக்கப்படுகிற வழித்தடங்களில் மாறுபாடு, விரிவாக்கம், குறைப்பு அல்லது பயணவகை ஆகியவை மூலம் உருவாக்கப்படும் வழித்தடங்களை பொறுத்தமட்டிலும் பொருந்தும்.

II. *சரக்கு ஊர்திகள்:*— 1988-ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் 88-ஆம் பிரிவு (5)-ஆம் பிரிவின் வகைமுறைக்கிணங்க ஆண்டொன்றுக்கு இருபக்க வரியாக ரூ. 2000 செலுத்துவதன் பேரில் மற்ற மாநிலம் ஒன்றியத்து ஆட்சிப்பரப்பால் மேலொப்பமிடப்படவேண்டிய ஒவ்வொரு மாநிலம் / ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் சரக்கு ஊர்திகளின் பங்கு 200 ஆகும். மேலும் அத்தகைய வாகனங்கள் அவற்றின் மீள் பயணங்களில் அந்த மாநிலம் ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இடம் எதிலும் அல்லது வழித்தடம் எதிலும் இறக்கி வைப்பதற்காக பரிமாற்றம் செய்யும் மாநிலம் / ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் சரக்கு எதனையும் ஏற்றி வருதல் கூடாது.

III. *மோட்டார் வாடகைச் சீருந்து:*— பிற மாநிலத்தால் மேலொப்பமிடப் படவேண்டிய ஒவ்வொரு மாநிலம் / ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் மோட்டார் வாடகைச் சீருந்தின் பங்கு ஒற்றை முனை வரி அடிப்படையில் 300 ஆக இருக்கும்.

IV. **பொதுவானவை :** (a) பரிமாற்றம் செய்யும் மாநிலத்தில் வேகம், சுமை, இருக்கை எண்ணிக்கை, உருவளவைகள், தடைசெய்யப்பட்ட சாலைகள் குறித்த உள்ளூர் நிபந்தனைகள் அதன் இசைவாணைச் சீட்டு வைத்திருப்பவரால் கவனிக்கப்பட வேண்டும் என ஒப்புக்கொள்ளப்படுகிறது. கர்நாடகா மாநிலம் மற்றும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்கிடையிலான ஒன்றுக்கொன்று ஒத்த உடன்படிக்கைக்குப் பின்பு எந்த நிலையிலும் இந்த உடன்படிக்கையின் பிரிவுக் கூறு எதுவும் திருத்தம் செய்யப்படலாம் அல்லது அதனுடன் ஒரு புதிய பிரிவுக் கூறு சேர்க்கப்படலாம்.

(b) இந்த உடன்படிக்கை அறுதி செய்வதற்கு முன்பு கர்நாடகா மாநிலம் மற்றும் புதுச்சேரி சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் மாநிலப் போக்குவரத்து ஏற்பு நிறுவனங்கள் இந்த உடன்படிக்கை ஒப்பமிடப்பட்ட தேதியிலிருந்து ஒற்றை முனை வரி அடிப்படையில் பின்னிணைப்பு - A மற்றும் B இல் உள்ளடக்கப்பட்ட பேருந்துகளை இயக்கலாம்.

*(துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி)*

**த. கரிகாலன்,**

அரசு கூடுதல் செயலர் (போக்குவரத்து).

## பின்னிணைப்பு - A

கர்நாடகா மாநிலப் போக்குவரத்து ஏற்பு நிறுவனத்தால் இயக்கப்படக் கூடிய வழித்தடங்கள்

| வரிசை எண் | வழியாகச் செல்லும் இடங்களுடன் வழித்தடம் | வழித்தடத்தின் நீளம் | | | | சுற்றுப் பயணங்களின் எண்ணிக்கை | பேருந்துகளின் எண்ணிக்கை | புதுச்சேரியில் சேவை கிலோ மீட்டர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | கர்நாடகா | தமிழ்நாடு | புதுச்சேரி | மொத்தம் | | | |
| 1 | பெங்களூர் - புதுச்சேரி (வழி ஒசூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, செஞ்சி, திண்டிவனம்) | 35 | 251 | 19 | 305 | 2 | 2 | 76 |
| 2. | பெங்களூர் - மாகி (வழி மைசூர், தலச்சேரி) | 273 | 64 | 6 | 343 | 2 | 2 | 24 |
| 3. | பெங்களூர் -திருநள்ளாறு (வழி ஒசூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சிதம்பரம், காரைக்கால்) | 35 | 382 | 18 | 435 | 2 | 4 | 72 |
| | மொத்தம் | | | | | 6 | 8 | 172 |

**த. கரிகாலன்,**

அரசு கூடுதல் செயலர் (போக்குவரத்து).

பின்னிணைப்பு - B

புதுச்சேரி சாலைப் போக்குவரத்து கழகத்தால் இயக்கப்படக்கூடிய வழித்தடங்கள்

| வரிசை எண் | வழியாகச் செல்லும் இடங்களுடன் வழித்தடம் | வழித்தடத்தின் நீளம் | | | | சுற்றுப் பயணங்களின் எண்ணிக்கை | பேருந்துகளின் எண்ணிக்கை | கர்நாடகாவில் சேவை கிலோ மீட்டர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | புதுச்சேரி | தமிழ்நாடு | கர்நாடகா | மொத்தம் | | | |
| 1. | புதுச்சேரி - பெங்களூர் (வழி விழுப்புரம், வேட்டவலம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, ஒசூர்) | 25 | 246 | 35 | 306 | 2 | 2 | 140 |
| 2. | புதுச்சேரி - மாகி (வழி விழுப்புரம், வேட்டவலம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, ஒசூர், பெங்களூர், மைசூர், தலச்சேரி) | 6 | 246 கேரளா 64 கிலோ மீட்டர்கள் | 308 | 624 | 1 | 2 | 816 |
| 3. | மாகி - கொல்லூார் (வழி தலச்சேரி, கண்ணர், காசர்காட், மங்களூர், குந்தபுரா) | 6 | 0 கேரளா 173 | 139 | 135 | 1 | 2 | 258 |
| 4. | மாகி — மைசூர் | 6 | 0 கேரளா 64 | 167 | 237 | 1 | 2 | 334 |
| 5. | புதுச்சேரி — கொல்லூார் (வழி விழுப்புரம், கிருஷ்ணகிரி, ஒசூர், பெங்களூர், ஆர்சிகிரி, ஷிமோகா, தீர்த்தஹள்ளி) | 25 | 246 | 524 | 795 | 1 | 2 | 1048 |
| | மொத்தம் | | | | | 6 | 10 | 2396 |

**த. கரிகாலன்,**

அரசு கூடுதல் செயலர் (போக்குவரத்து).

GOVERNMENT OF PUDUCHERRY

**TRANSPORT SECRETARIAT**

*(G.O. Ms. No. 11/TD/2010, dated 7th June 2010)*

NOTIFICATION

Whereas, the State of Karnataka and the Union territory of Puducherry propose to enter into reciprocal agreement for operation of stage carriages, goods carriages and motor cabs on the inter-State route by the operators of both the said State and the Union territory and facilitate the people of the said State and the Union territory to have efficient, economical and co-ordinated stage carriages, goods carriage and motor cab services on the inter-State routes from Karnataka to Puducherry and Puducherry to Karnataka under sub-section (5) of section 88 of the Motor Vehicles Act, 1988;

And whereas, the draft of the reciprocal agreement issued under G.O.Ms. No.14/2009/TD, dated the 17th September 2009 of the Transport Secretariat, Puducherry has been published in Part-I of the Extraordinary Official Gazette No.71, dated 17th September 2009 of Puducherry as required under sub-section (5) of section 88 of the said Act;

And whereas, suggestions received on the draft agreement have been considered by the department;

Now, therefore, in exercise of the powers conferred by sub-section (6) of section 88 of the Motor Vehicles Act, 1988 (Central Act 59 of 1988) the Government of Puducherry hereby enters into the reciprocal agreement with the Government of Karnataka as follows:-

INTER-STATE RECIPROCAL TRANSPORT AGREEMENT BETWEEN THE STATE OF KARNATAKA AND THE UNION TERRITORY OF PUDUCHERRY

This agreement is made on this day the 7th June, 2010 between the Governor of Karnataka (hereinafter called the Government of Karnataka) which expression shall wherever the context so admits, include his successors in office on the one hand and the Lieutenant-Governor of the Union territory of Puducherry (hereinafter called the Government of Puducherry) which expression shall wherever the context so admits, include his successors in office on the other hand subject to the conditions as indicated below:-

I. *Stage carriage services*.— Inter-State route for operation of stage carriages by both the State and the Union territory shall be as shown below :

(a) The Karnataka State Transport Undertaking shall operate the services on the routes shown in Annexure – "A".

(b) The Puducherry Tourism and Transport Development Corporation Limited since bifurcated from Tourism and redesignated as Puducherry Road Transport Corporation shall operate the services on the route as shown in Annexure – "B".

(c) The fares and freights charged by an operator in the reciprocating State shall be the same as those charged by the operators of that State for similar services.

(d) The competent authorities of both the State and the Union Territory shall issue spare bus permits for operation as substitute on single point tax in the event of break down or accident of regular permitted stage carriage of State Transport Undertaking subject to the conditions:—

(i) that the number of buses and trips on any route does not exceed the permitted limit; and

(ii) that the vehicles so operated shall exhibit a certificate issued to the extent of the above condition by the concerned State Transport Undertaking of the respective States/Union Territory. Intimation to this effect shall be sent to the Reciprocating Transport Authorities within a fortnight from the date of such operation.

(e) Variation of that part of an inter-State route which lies exclusively in the area of the primary authority may be made by the State Transport Authority concerned subject to the condition that such variation shall be brought to the notice of the State Transport Authority of the reciprocating State. In case, the variation sought for is in the reciprocating State, it shall be decided on mutual consent of both the State Transport Authorities.

(f) The replacement of a vehicle by another vehicle may be noted in the countersignature slip by the Home State Authorities and intimation sent to the State Transport Authority of the reciprocating State mentioning the Registration mark and seating capacity of the vehicle.

(g) **Taxation :** It is agreed that the transport vehicles covered by countersignature in the reciprocating State shall be exempted from payment of tax to the reciprocating State. This benefit of single point tax shall apply to the stage carriages having both regular and temporary permits of the routes included in the inter-State agreement. The benefit of single point tax shall also apply in respect of the routes finding place in the agreement irrespective of variations, extension, curtailment or pattern of trips that may be allowed on future dates.

II. *Goods carriages :* The quota of goods carriages of the State/Union Territory to be countersigned by the other in accordance with the provision of section 88 (5) of the Motor Vehicles Act, 1988 shall be 200 on payment of bilateral tax of Rs. 2000 per annum, provided that such vehicles shall not on their return journey pick up any goods in the reciprocating State/Territory for setting down at any place or route in that State/Union territory.

III. *Motor cabs:* The quota of motor cabs of the State/Union Territory to be countersigned by the reciprocating parties shall be 300 on single point tax basis.

IV. *General :* (a) It is agreed that the local conditions regarding speed, load, seating capacity, dimensions and prohibited roads in the reciprocating State shall be observed by the permit holders thereon. Any clause in this agreement may be amended or a new one added to it at any stage after mutual agreement between the State of Karnataka and the Union territory of Puducherry.

(b) On finalisation of this agreement the State Transport Undertakings of Karnataka and Puducherry Road Transport Corporation shall operate the buses covered in Annexure – A & B on single point tax basis.

(By order of the Lieutenant-Governor)

T. KARIKALAN,
Additional Secretary to Government (Transport).

ANNEXURE – A

**ROUTES TO BE OPERATED BY THE STATE TRANSPORT UNDERTAKING OF KARNATAKA**

| Sl. No. | Route with *via* places | Route Length | | | | No. of round Trips | No. of buses | Service Kms. in Pondy |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Karnataka | Tamil Nadu | Pondy | Total | | | |
| 1. | Bangalore – Puducherry (*Via* Hosur, Krishnagiri, Thiruvannamalai, Gingee, Tindivanam) | 35 | 251 | 19 | 305 | 2 | 2 | 76 |
| 2. | Bangalore – Mahe (*Via* Mysore, Thalaserry) | 273 | 64 | 6 | 343 | 2 | 2 | 24 |
| 3. | Bangalore – Thirunallar (*Via* Hosur, Krishnagiri, Thiruvannamalai, Chidambaram, Karaikal) | 35 | 382 | 18 | 435 | 2 | 4 | 72 |
| | Total | | | | | **6** | **8** | **172** |

T. Karikalan,
Additional Secretary to Government (Transport).

ANNEXURE – B

**ROUTES TO BE OPERATED BY THE PUDUCHERRY ROAD TRANSPORT CORPORATION**

| Sl. No. | Route with *via* places | Route Length | | | | No. of round Trips | No. of buses | Service Kms. in Karnataka |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pondy | Tamil Nadu | Karnataka | Total | | | |
| 1. | Puducherry – Bangalore (*Via* Villupuram, Vettavalam,Thiruvannamalai, Krishnagiri, Hosur) | 25 | 246 | 35 | 306 | 2 | 2 | 140 |
| 2. | Puducherry – Mahe (*Via* Villupuram, Vettavalam, Thiruvannamalai, Krishnagiri, Hosur, Bangalore, Mysore, Thalasery) | 6 | 246 Kerala–64 kms | 308 | 624 | 1 | 2 | 816 |
| 3. | Mahe – Kollur (*Via* Thalaserry, Kannur, Kasargod, Mangalore, Kundapura) | 6 | 0 Kerala – 173 | 129 | 135 | 1 | 2 | 258 |
| 4. | Mahe – Mysore (*Via* Thalaserry) | 6 | 0 Kerala - 64 | 167 | 237 | 1 | 2 | 334 |
| 5. | Puducherry – Kollur (*Via* Villupuram, Krishnagiri, Hosur, Bangalore, Arsikere, Shimoga, Thirthahalli) | 25 | 246 | 524 | 795 | 1 | 2 | 1048 |
| | Total | | | | | 6 | 10 | 2396 |

**T. KARIKALAN,**
**Additional Secretary to Government (Transport).**

Government Central Press
Directorate of Stationery and Printing
Puducherry-9
online publication at **"http://styandptg.puducherry.gov.in"**